**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ஓ.மு.எண்.1425/ஆ5/2025, நாள்.21.04.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தினத்தந்தி மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் – வெற்றி நிச்சயம் என்ற நிகழ்ச்சி 26.04.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறுதல் – அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் கலந்துக்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. வேலூர் மாவட்ட தினத்தந்தி அலுவலக மேலாளரின் கடிதம் நாள். 20.03.2025 மற்றும் 02.04.2025
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 25.03.2025

.....

வேலூர் மாவட்டம், தினத்தந்தி மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் வெற்றி நிச்சயம் என்ற நிகழ்ச்சியானது 26.04.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9.15 மணி முதல் மாலை 5.00 மணி வரை VIT பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது எனவும், இந்நிகழ்ச்சியில் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் குறைந்தது 50 மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ளும் மாணவ / மாணவிகளுக்கு எழுதுபொருள், மதியஉணவு மற்றும் பேருந்துக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் குறைந்தது 50 மாணவ / மாணவிகள் பெற்றோருடன் பாதுகாப்பாக கலந்துக்கொண்டு பயன்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
2. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் பெறக்கூடாது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு / நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள் வேலூர் மாவட்டம்.

நகல் –
1. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மேலாளர்,
தினத்தந்தி அலுவலகம்,
35, ஆற்காடு சாலை, வேலூர் – 04.